| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 31/12/2022 | முதல் | 04/01/2023 |
| | அறிக்கை எண் : | 104/ 2022 | வெளியீட்டு நாள் : | 30/12/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31° - 34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.12.2022 முதல் 29.12.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-01-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/12 | 26/12 | 27/12 | 28/12 | 29/12 | தேதி | நாள்-4 31/12 | நாள்-5 01/01 | நாள்-5 02/01 | நாள்-4 03/01 | நாள்-5 04/01 |
| 0.0 | 18.1 | 5.2 | 7.4 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 34 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 33 | 33 | 34 |
| 24 | 24 | 23 | 24 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 22 | 22 | 23 | 23 |
| 6 | 5 | 6 | 5 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 2 | 2 | 2 | 2 |
| 66 | 89 | 94 | 80 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 70 | 69 | 65 | 55 | 57 | | 50 | 40 | 50 | 50 | 50 |
| 11 | 7 | 6 | 9 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 4 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 32°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

அடுத்த 5 நாட்களுக்கு பெரும்பாலும் வறண்ட வானிலேயே நிலவ வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : தக்காளி, பருத்தி,** கால்நடை.

**தக்காளி:**

- தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ள ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈ கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம்.

**பருத்தி:**

- இறவை குளிர்கால பருத்தியில் மிகக்குறைந்த வெப்பநிலை காரணமாக பூக்கள் உதிர்வு தென்படுகிறது. இதனை கண்காணித்து என்.ஏ.ஏ. 40 பிபிஎம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

கால்நடை:

- ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்படுகின்றது.
- இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் பாதிக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே இந்நோயால் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.
- மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும்.
- இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி விழும். இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரிய உதயத்திற்குப் பின் 1 மணி நேரம் கழித்து மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.
- அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி இந்நோய்க்கான தடுப்பூசியை போடுவது மிகவும் அவசியமாகும்.